# 26.RANKING TEST AND NUMBER/LETTER TEST

1. ஒரு வகுப்பில் அரையாண்டுத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுள் விஜய் மேலிருந்து 14வது இடத்திலும் கீழிருந்து 30வது இடத்திலும் உள்ளார். அத்தேர்வில் 15 மாணவர்கள் தோல்வியுற்றனர் எனில் எத்தனை மாணவர்கள் தேர்வு எழுதினார்கள்?

   1) 57  2) 58  3) 56  4) 55

2. தினேஷ் என்பவர் 40 பேர் கொண்ட ஒரு வரிசையில் வலது புறத்திலிருந்து 14வதாகவும், மோகன் என்பவர் இடதுபுறத்தில் இருந்து பதினெட்டாவது இடத்திலும் உள்ளனர். எனில், தினேஷ் மற்றும் மோகன் ஆகிய இருவருக்கிடையே அமர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை?

   1) 6  2) 8  3) 7  4) 9

3. ஒரு வகுப்பில் சுனில் என்பவர் மேலிருந்து 7வது நிலையிலும் கீழிருந்து 27வது நிலையிலும் உள்ளார். எனில், வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை ?

   1) 31  2) 32  3) 33  4) 34

4. நான் ஒரு வரிசையில் இருபுறமும் இருந்து 11வது இடத்தில் உள்ளேன். எனில் , அவ்வரிசையில் உள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கை எத்தனை?

   1) 11  2) 20  3) 21  4) 22

5. ஒரு நேர்வரிசையாக அமர்ந்துள்ள மாணவர்களில் கவிதா இரு முனைகளிலிருந்தும் 21-வதாக அமர்ந்திருந்தால் அவ்வரிசையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை?

   1) 42  2) 40  3) 43  4) 41

6. 40 பேர் கொண்ட வகுப்பில் ரவி என்பவர் சுந்தரைவிட 7 இடங்கள் (Rank) முன்னதாக உள்ளார். கடைசியிலிருந்து 17வது இடத்தில் சுந்தர் இருந்தால், முதலிலிருந்து ரவி எத்தனையாவது இடத்தில் இருப்பார்?

1) 16 2) 17 3) 18 4) 24

7. ஒரே வரிசையில் நின்றிருக்கும் 20 சிறுமிகளில், தீபா இடது ஓரத்திலிருந்து ஐந்தாவதாகவும், பூஜா வலது ஓரத்திலிருந்து பத்தாவது இடத்திலும் நிற்கின்றனர். பூஜா தீபாவை நோக்கி ஐந்து இடங்கள் நகர்கிறார் எனில், பூஜா, இடது ஓரத்திலிருந்து எந்த இடத்தில் நிற்கின்றார்?

1) ஏழாவது 2) ஐந்தாவது
3) நான்காவது 4) ஆறாவது

8. மாணவர்கள் வரிசையில் நிற்கின்றனர். அதில் சத்யா என்ற மாணவர் இடது ஓரத்திலிருந்து ஆறாவதாகவும், ராகவ் என்ற மாணவர் வலது ஓரத்திலிருந்து எட்டாவதாகவும் நிற்கின்றனர். சத்யாவிற்கும், ராகவிற்கும் இடையில் எவரும் நிற்கவில்லை எனில், வரிசையில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை.

1) 12 2)14 3) 13 4) 16

9. 52 மாணவர்கள் உள்ள ஒரு வகுப்பில் லீலா என்ற மாணவி மேலிருந்து எட்டாவது தரவரிசையில் உள்ளார். அடுத்த முனையிலிருந்து அவரது தரவரிசை.

1) 44 2) 43 3) 45 4) 46

10. ராஜா, மாணவர்கள் உள்ள வரிசையில் நடுவில் நிற்கின்றான். அவன் முன்பகுதியிலிருந்து 7வதாக நிற்கின்றான். எனில், அவனுக்கு பின்னால் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை?

1) 6 2) 7 3) 8 4) 15

11. ஒரு வரிசையில் குமார் முன்னால் இருந்து 10வதாகவும், வீரா பின்னால் இருந்து 25-வதாகவும், நகுல் என்பவர் இருவருக்கும் நடுவில் நிற்கின்றார். அவ்வரிசையில் 50 பேர் உள்ளனர். எனில், முன்னால் இருந்து நகுலின் நிலை யாது?

1) 20-வது 2) 19-வது
3) 18-வது 4) 17-வது

12. 7 8 9 7 6 5 3 4 2 8 9 7 2 4 5 9 2 9 7 6 4 7 என்ற எண் தொடரில் 9 என்ற இலக்கத்தினை தொடர்ந்து, 6 என்ற இலக்கத்தினை முன்னதாக கொண்ட 7-களின் எண்ணிக்கை

1) 2 2) 5 3) 4 4) 3

13. கீழே கொடுக்கப்பட்ட தொடரில், எத்தனை முறை இரு அடுத்தடுத்த எண்களின் வித்தியாசம் 3 என வருகிறது?
8 5 1 7 6 3 4 8 5 9 7 4 1 9 6

1) 3 2) 4 3) 5 4) 6

14. கீழ்கண்ட எண் தொடரில், எத்தனை முறை 5 என்ற எண்ணை முன்னதாகக் கொண்ட 2-கள் வருகின்றது?
4 3 5 2 7 8 0 5 2 9 7 5 2 1 4

1) 3 2) 5 3) 6 4) 4

15. 7, 10, 2, 0, 3, 7, 5, 8, 9, 11, 12, 6 என்ற தொடரினை வலமிருந்து இடமாக மாற்றி அமைத்து, இடப்பக்கமாக 7-வது எண்ணிற்கு வலப்பக்கம் 4-வதாக அமையும் எண்?

1) 10 2) 2 3) 7 4) 5

16. ‘ REGIONAL’ என்ற வார்த்தையை ஆங்கில அகர வரிசைப்படி வரிசைப்படுத்தினால், எத்தனை எழுத்துக்கள்

தமது நிலையில் (Position) மாறாமல் இருக்கும்?

1) 3     2) 2     3) 4     4) 1

17. ‘ INSTITUITIONS’ என்ற ஆங்கில வார்த்தையில் 1வது எழுத்து இரண்டாவது எழுத்துடனும், 3வது எழுத்து 4வது எழுத்துடனும் மாற்றிக்கொள்ளப்பட்டால் வலதுபுறத்திலிருந்து 3வதாக அமையும் எழுத்திற்கும், இடதுபுறத்திலிருந்து 4-வதாக அமையும் எழுத்திற்கும் நடுவே அமையும் எழுத்து?

1) U     2) T     3) S     4) N

18. கீழ்கண்ட தொடரில் 3 என்ற எண்ணைத் தொடர்ந்தும், 7 என்ற எண்ணை முன்னதாகக் கொண்டு வராமலும் உள்ள 5-களின் எண்ணிக்கை
895 32538556873535775365З
35738

1) 1     2) 2     3) 3     4) 4

19. கீழ்கண்ட தொடரில் எத்தனை முறை 1, 3 மற்றும் 7 சேர்ந்தும், 7 என்ற எண் நடுவிலும்,1 மற்றும் 3 ஆகிய எண்கள் 7 என்ற எண்ணிற்கு ஏதேனும் ஒரு பக்கத்திலும் அமைந்து இருக்கின்றது?

29731737713317385713777173905

1) 3     2) 4     3) 5     4) 5க்கு மேல்

20. ஆங்கில எழுத்துக்கள் வரிசையாக எழுதப்பட்டுள்ளது. ஆங்கில எழுத்துக்களின் வரிசையில் முதல் பாதி வலது புறமிருந்து இடதுபுறமாக எழுதப்பட்டால், உன்னுடைய வலதுபுறத்திலிருந்து 13வது எழுத்திற்கு இடதுபுறமாக அமையும் ஐந்தாவது எழுத்து எது?

1) S     2) E     3) F     4) D